# 5 சம்பந்தர் தேவாரம்



## அ. தேவாரம் - 1

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மூன்று வயதில் ஞானப்பாலை உண்டு தேவாரம் பாடியவர். சிவபெருமானே எல்லா உயிர்க்கும் தஞ்சம் என்று உணர்ந்தவர். அப்பெருமானை வழிபடத் தமிழ் நாட்டிலுள்ள பல தலங்களுக்கும் யாத்திரை செய்தவர். பண்ணோடு தேவாரம் பாடி இறைவனைத் துதித்தவர்.

இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமெல்லாம் கோயிலாக விளங்கினும் சிதம்பரத் தலமே கோயில் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் ஒருமுறை சிதம்பரத்தின் எல்லையை அடைந்தார். அப்போது தில்லை மூவாயிரவர் எனச் சிறப்பிக்கப்படும் அந்தணர்களும், ஏனைய அடியார்களும் அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். நன்கு அலங்கரிக்கப்பட்ட வீதிவழியே எழுந்தருளிய சம்பந்தப் பெருமான் கோபுரத்தைப் பணிந்தெழுந்து திருவீதி வலம்வந்து கோயிலினுட் சென்றார். அங்கே அனவரதமும் ஆனந்தத்

திருக்கூத்தாடும் அம்பலத்தரசனைக் கும்பிட்டு எழுந்தார். மகிழ்ச்சி பொங்கப் பதிகம் பாடியருளினார். அப்பதிகத்தில் முதலாவது பாட்டு இங்கு தரப்பட்டுள்ளது.

**தலம்- கோயில் (சிதம்பரம்)** **பண்- குறிஞ்சி**

**திருச்சிற்றம்பலம்**

**கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே**
**செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய**
**முற்றா வெண் திங்கள் முதல்வன் பாதமே**
**பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.**

**திருச்சிற்றம்பலம்**

## பொழிப்பு

வேதாகமங்களிற் கற்றபடி தீ வளர்த்து, வேள்விகளைச் செய்து, நாட்டிலே துன்பம் வராதபடி காக்கின்ற அந்தணர்கள் தில்லையிலே வாழ்கின்றனர். இத்தகைய சிறப்புப் பொருந்திய சிற்றம்பலத்தின் கண்ணே இளம்பிறையைத் தம் சடாமுடியில் தாங்கியபடி எழுந்தருளியிருப்பவர் சிற்றம்பலநாதர். மூவுலகங்களுக்கும் முதல்வராகிய எம்பெருமானின் தூக்கிய திருவடியைப் பற்றிக்கொண்டவர்களைப் பாவங்கள் பற்றி வருத்தாது.

இப்பாடல், தில்லைச் சிற்றம்பலநாதரின் திருவடியைப் பற்றுக்கோடாகக் கொண்டவர்களைப் பாவங்கள் பற்றிக்கொள்ளமாட்டாது என்கின்றது.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| கலி | - | துன்பம், வறுமை, கேடு |
| செற்றார் | - | ஒழித்தார் |
| முற்றா வெண்திங்கள் | - | இளம் பிறைச் சந்திரன் |

## பயிற்சி

1. சிதம்பரத்தின் சிறப்பு யாது?
2. சிதம்பரத்தலத்தில் வேள்விகளைச் செய்வோர் யார்?
3. வேள்வி எவ்வாறு செய்யப்படுகிறது? அதன் நோக்கம் யாது?
4. யாரைப் பாவங்கள் பற்றாது என்று இப்பாடலிற் கூறப்படுகிறது?
5. இப்பாடலில் தில்லைச் சிற்றம்பலத்து இறைவனின் தோற்றம் பற்றி யாது குறிப்பிடப்பட்டுள்ளது?

## ஆ. தேவாரம் - 2

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மதுரையிலே பாண்டிய மன்னனைச் சமண சமயத்திலிருந்து மீட்டெடுத்துச் சைவனாக்கினார். திருநீற்றின் மகிமையை விளக்கியருளினார். அப்போது சீர்காழியிலே அவரது தந்தையாராகிய சிவபாதவிருதயர் பிள்ளையின் பிரிவுக்கு ஆற்றாது வருந்தி மதுரையை வந்தடைந்தார். சம்பந்தர் அவரைக் கண்டதும் தோணியப்பரதும், பெரியநாயகியாரதும் திருவடிகளைச் சிந்தித்தார். ''எனை அறியாப் பருவத்தே ஆட்கொண்ட பெருந்தகை எம்பெரு மாட்டியுடன் இருந்ததே'' என்று நினைந்து பதிகத்தைப் பாடினார். அப்பதிகத்தின் முதற்பாடலைப் பாடுவோம்.

***தலம் - திருக்கழுமலம்*** ***பண் - கொல்லி***

***திருச்சிற்றம்பலம்***

**மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்**
**எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவிலை**
**கண்ணில் நல்லஃது உறும் கழுமல வளநகர்**
**பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே**



***திருச்சிற்றம்பலம்***

### பொழிப்பு

எங்கு பார்த்தாலும் கண்ணில் நல்ல காட்சியே படுகின்ற, செழிப்புமிக்க நகர் திருக்கழுமலம். இங்கு பெருந்தகையாளரான திருத்தோணியப்பர் பெண்களுள் நல்லாளாகிய உமாதேவியாருடன் இருக்கிறார்.அப்பெருந் தகைமையை உடைய இறைவனை வணங்குபவருக்கு இப்பூவுலகில் யாவரும் போற்ற வாழும் வாழ்வு உண்டாகும். சிந்தித்துப் பார்த்தால் மறுமையிலும் நல்ல முத்திப்பேற்றுக்கு சிறிதளவேனும் குறைவு உண்டாகாது.

## அருஞ்சொற்பொருள்

| | | |
|---|---|---|
| மண் | - | பூமி |
| வைகலும் | - | நாள்தோறும் |
| நல்லகதி | - | வீடுபேறு |
| கழுமலம் | - | சீர்காழி |

## பயிற்சி

1. திருக்கழுமலத்தில் இறைவனும் இறைவியும் எப்பெயரோடு வீற்றிருக்கிறார்கள்?

2. 'மண்ணில் நல்ல வண்ணம் வாழ' யாது செய்தல் வேண்டும் என்று இப்பாடலிற் கூறப்பட்டுள்ளது?

3. திருஞானசம்பந்தர் மதுரைக்கு வந்த காரணம் யாது?

## குழுச் செயற்பாடு

வகுப்பறையில் தேவாரங்களைப் பண்ணோடு பாடுங்கள்.